ந.க.எண். 06032/2006 ஈ5

சிறப்பு சிற்றூராட்சிகள் இயக்கம்,
சென்னை – 108.

நாள்: 05.04.2006

**சுற்றறிக்கை**

பொருள்: தணிக்கை – சிறப்பு சிற்றூராட்சிகளின் மீதான தணிக்கை – சேமநலநிதிக் கணக்கு – வட்டி பிரேரணை, செலவுச்சீட்டுக்கள் அனுப்புதல் மற்றும் வங்கியிருப்பு இணக்கச்சான்று – முறையாக தயாரிக்கப்படவில்லை மற்றும் அனுப்பப்படவில்லை.

சிறப்பு சிற்றூராட்சிகளின் மீதான தணிக்கை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயக்குநர், சிறப்பு சிற்றூராட்சிகள் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநரின் கலந்தாய்வில், சிறப்பு சிற்றூராட்சிகளில் பின்வரும் பணிகள் முறையாக உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தவில்லை என்பது தெரிய வருகிறது.

i சிறப்பு சிற்றூராட்சிகளில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் (Non Provinicialised personnel) ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யும் சேமநலநிதி சந்தா/ முன்பணம் திரும்ப செலுத்துதல், தொகை, உடனுக்குடன் கருவூலக் கணக்கில் செலுத்தப்படாமல், பொதுநிதி வைப்புக் கணக்கில் நீண்டகாலம் செலுத்தப்படாமல் உள்ளதாக தெரிய வந்துள்ளது. தேவையில்லாமல் வைப்புக் கணக்கில் வைப்பதால் ஏற்படும் வட்டி இழப்பினை சம்மந்தப்பட்ட செயல் அலுவலர்/எழுத்தர் பொறுப்பாக்கி ஈடு செய்யப்பட வேண்டும்.

ii சேமநலநிதி ரொக்கப் பதிவேடு, சுருக்கப் பதிவேடு மற்றும் சேமநலநிதி பேரேடு எழுதப்பட்டு ஒவ்வொரு பணியாளரின் சேமநலநிதி இருப்பினை இறுதி செய்ய வேண்டும். சில சிறப்பு சிற்றூராட்சிகளில் கடந்த 15 ஆண்டு காலமாக சேமநலநிதி தொடர்பான பதிவேடுகள் முறையாக பேணப்படாததால் வட்டி பிரேரணை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்படாதது வருத்தத்திற்குரியதாகும். எனவே, இனியும் தாமதிக்காமல் சேமநலநிதி வட்டி பிரேரணை தயாரிக்கப்பட்டு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு அனுப்பப்பட வேண்டும்.

iii சிறப்பு சிற்றூராட்சிகளின் செலவுச் சீட்டுக்கள் (Paid Vouchers) ஒவ்வொரு மாதத்தின் 25ம் தேதிக்குள் முந்தைய மாதத்தின் செலவுச் சீட்டுக்கள் மன்றத் தீர்மான நகலுடன் தணிக்கை அலுவலகத்திற்கு தவறாமல் அனுப்பப்பட வேண்டும்.

iv ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் முந்தைய மாதத்தின் வங்கியிருப்பு இணக்கச் சான்று (Bank Reconciliation Statement) தயாரிக்கப்பட்டு செயல் அலுவலரால் சான்றளிக்கப்பட வேண்டும். இதன் தொடர்பாக ஏற்கனவே ஆய்வுக்கூட்டத்திலும் இவ்வியக்கக நேர்முக கடிதம் எண் 7087/2005/ஈ5 நாள் 28.11.2005ல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

v அனைத்து மண்டல உதவி இயக்குநர்கள், செயல் அலுவலர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்திலும் மற்றும் தல ஆய்விலும் தவறாமல் மேலே குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்பட்டதை உறுதி செய்வதுடன், அதன் விபரம் 30.5.2006–க்குள் இவ்வியக்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புதல் அனுப்பப்பட வேண்டும்.

**ஒம்/– எம்.பி. நிர்மலா,**
இயக்குநர்

பெறுநர்

அனைத்து மண்டல சிறப்பு சிற்றூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
நகல் – இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.